# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD
FOR THE PEOPLE”
Isaiah 62 : 10**

Translated from BS 882
Published on Nov 30, 2014

**பொருளடக்கம்**

வந்து கொண்டிருக்கும் புதிய யுகம் ......... 2

கர்த்தருக்குக் காத்திருத்தல் ................. 7

BS Tamil Version - 27

2014

# வந்து கொண்டிருக்கும் புதிய யுகம் New Dispensation Coming

"சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்: அவர்கள் தப்பிப்போவதில்லை. சகோதரரே, அந்த நாள்திருடனைப் போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்: நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே." 1 தெச. 5: 1–5

## அழகான சத்தியம்

**"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிருக்கிறதே"** என உலகத்தார் சொல்வார்கள் என்று நிகழ்காலத்தைக் குறித்து தீர்க்கதரிசனமாக முன்னுரைத்த பரி. பேதுருவின் மூலமாக மானிட மனதின் பொதுவான போக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறியாமையே உலகத்தாரிடம் எதிர்பார்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆனால் தேவனுடைய உண்மையான ஜனங்கள் அவருடைய விசேஷித்த அறிவுரையான வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறார்கள், அதனால் அவர்கள் தெய்வீகக் காரியங்களைப் பொறுத்த வரையில் இருளில் இருக்க வேண்டியதில்லை. நம்முடைய உலகமானது ஆறாயிரம் ஆண்டுகளாக ஒளிக்கும் இருளுக்கும், சத்தியத்துக்கும் தப்பறைக்கும், நீதிக்கும் பாவத்துக்கும் இடையே நடக்கும் போர்க்களமாக இருந்து வருகிறது; இருளின் பிரபு, அதாவது "**இவ்வுலகத்தின் அதிபதி**" என்று வர்ணிக்கப்படுகிறவன், தன்னுடைய சேனையை நேரடியான முறையில் வழிநடத்தி மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தியும், இன்னும் அவர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டும் வருகிறான். ஒளியின் பிரபுவானவர் தமது ஸ்தானாபதிகள் மூலமாக மிதமான வழியில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார். அந்த ஸ்தானாபதிகள் ஆயுதங்கள் அல்லது யுத்தமுறைகளை பயன்படுத்தக்கூடாது என்றும், ஆனால் அவர்களை எதிர்க்கிறவர்களை நிச்சயமாக சாந்தத்தோடு திருத்த வேண்டும் என்று அவரால் விசேஷமாக எச்சரிக்கப் பட்டனர். அவர்களுடைய மனசாட்சிகள் அனுமதிக்கும் அளவுக்குத்தக்கதாக அவர்கள் "அதிகாரங்களுக்கு" கீழ்ப்பட்டு கூடுமானவரைக்கும் எல்லா மனுஷரோடும் சமாதானமாய் வாழவேண்டும். தீமையின் அதிகாரங்களுக்கு கீழ்ப்படும் இந்த அனுபவமானது கடினமான ஒரு பாடமாக இருந்து வருகிறது, கற்றுக் கொள்ள கஷ்டமானதாக இருக்கிறது; விசுவாசப் பரீட்சை அதைப்போலவே சகிப்புத் தன்மை ஆகிய இவற்றின் மதிப்பு சில சமயங்களில் ஏற்றுக் கொண்டு பாராட்டுவதற்கு கடினமாக இருந்து வருகிறது. ஆனால், இவர்கள் தங்கள் இரட்சிப்பின் அதிபதிக்கு பிரியமாக நடக்க வேண்டுமானால் இவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும். ஏனெனில் பல நூற்றாண்டுகளாக, "எவ்வளவு நீண்ட காலம், ஆ, கர்த்தாவே!" என்று அவர்களுடைய இருதயங்களில் இருந்து தேவனிடமாக அந்த ஜெபம் மேலே சென்றிருக்கிறது. என்றென்றும் பாவத்தையும், மரணத்தையும் ஜெயங்கொள்ள அனுமதிப்பது தெய்வீக நோக்கமாக இருக்க முடியாது என்ற பகுத்தறியும் காரணகாரியங்கள் அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

தேவன் ஒரு "பெரிய தோட்டக்காரராகத்" தம்மைக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு யுகமும் ஒவ்வொரு "பருவ காலமாகும்." அது அதற்கேற்ற விளைச்சல்களைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு யுகமும் வயலை உழுவதற்கும் நல்ல விதையை விதைப்பதற்கும், அறுவடை வேலைக்கும் உரிய ஏற்ற காலத்தைக் கொண்டிருக்கிறது. வேதாகம மாணாக்கர்கள் என்ற விதத்தில் நாம் ஏற்கனவே




**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*



விழித்துக்கொண்டு தெளிந்தவர்களா யிருக்கக்கடவோம் – 1 தெச. 5 : 6

ஜலப்பிரளயத்துடன் முடிவடைந்த வேலையையும், ஆதிப் பிதாக்கள் யுகத்தின்போது நிறைவேற்றப்பட்ட வேறு விதமான வேலையையும், யூத யுகத்தின் போது அதாவது யாக்கோபு மரணம் முதல் (கி.மு. 1813), அதிலும் குறிப்பாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதிலிருந்து (கி.மு. 1615), இயேசுவின் மரணம் வரைக்கும் (கி.பி. 33) பூர்த்தியான மேலும் வேறுபட்ட சில வேலைகளையும் கவனித் திருக்கிறோம். நமது கர்த்தருடைய மூன்றரை ஆண்டுகால ஊழியமானது, யூத ஜனங்களுடைய தேவ தயவாகிய யுகம் அல்லது “**சந்திப்பின் நாள்**” ஆகியவற்றின் முடிவு காலமாகவும் ஒரு அறுவடையின் காலமாகவும் இருந்தது. அவர் தம்முடைய சீஷர்களிடம், “**நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்.**” (யோவா. 4 : 38). உழுகிறதும், அறுப்பதுமாகிய யூதயுகத்துடன் தொடர் புடைய காரியங்கள் யாவும் மிகவும் முந்தின கடந்த காலத்துக்குரியவை. எகிப்தியரிடம் அடிமையாயிருந்தது இஸ்ரயேலர்களில் ஓர் ‘உழுகிற வேலையைச்’ செய்தது. எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் தப்பி, கானானை அடைவதற்கு முன்பு அவர்கள் வனாந்திரத்தில் நாற்பது வருடங்களாக அலைந்து திரிந்ததில் அது தொடர்ந்தது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதும், அவர்கள் ஒரு ஜனமாக ஸ்தாபிக்கப்பட்டதும், அவர் களுடைய பலிகள் பற்றிய பாடங்கள், அவர்களுடைய தீர்க்கதரிசிகளின் புத்திமதிகள் யாவும் ‘விதை விதைப்பது’, ‘களை பிடுங்குவது’, ‘வளரச்செய்வது’ போன்ற அனுபவங் களை உள்ளடக்கியிருந்தன. அவர்களுடைய யுகத்தின் முடிவில், இயேசு அந்த அனுபவத்தின் மூலமாக முதிர்ந்த கனிகளாகக் கூட்டிச் சேர்த்தார். நம்முடைய கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களால் யூத யுக அறுவடையில் கூட்டிச் சேர்க்கப்பட்ட பயிர்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்காக உள்ளன. இவர்கள் யூத மதத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழிருப்பதில் இருந்து கிறிஸ்தவமதத்திற்குள்ளாக, “கிறிஸ்துவின் சரீரமாகிய சபை”க்கு மட்டுமே பொருந் தக்கூடிய ஒரு உடன்படிக்கையின் கீழ் கூட்டிச் சேர்க்கப் பட்டனர். “**பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்**” என்று வாசிக்கிறபடி இந்த உடன்படிக்கையின் கீழ் மேசியாவுடன் இணைக்கப்படுகிறார்கள். (சங். 50 : 5). மேசியாவின் சரீர அங்கங்களாக யேகோவாவுடன் நல்லுறவுக்குள்ளாக வருகிற எல்லாருமே சிலுவையின் வழியாக, அதாவது தங்களுடைய சொந்த குறை பாடுகளை உணர்ந்து கொள்வதன் மூலமாகவும், இயேசு மற்றும் அவருடைய தியாகபலி தங்களுடைய பாவங்களை பரிகரிக்கிறது என்றும் தங்களுடைய குற்றங்களை மூடுகிறதான ஒன்றாக, அதன் மூலம் மாத்திரமே அவர்களுடைய பலிகள் “**பரிசுத்தமும் தேவனுக்கு உகந்ததுமானதாக**” கொடுக்கப்பட்டன என்றும் ஏற்றுக் கொண்டார்கள்.

யூத யுகத்தின் அறுப்பின் வேலை சுவிசேஷ யுகத்தின் விதைப்பின் வேலைக்குள்ளாகப் பிணைந்து இயேசுவோடுகூட உடன் பலியிடுபவர்களாக ஆவதற்கு ஒரு அழைப்பாக, யூதர்களுக்கு அப்பால் உள்ள தேசங்களின் மத்தியில் கேட்கிற காதுள்ளவர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 18 நூற்றாண்டுகளாக இந்த விதைப்பின் பணி, களையெடுக்கும் அனுபவங்களுடனும் பல்வேறான விளைவித்தல்களுடனும் முன்னேறிக் கொண்டு வந்தது; அதன் பலனாக நாம் இந்த சுவிசேஷ யுகத்தின் அறுவடைக் காலத்திற்கு வந்தடைகிறோம். இது அறுப்பின் காலமாக, அதாவது ராஜ்யத்திற்குள் கூட்டிச் சேர்க்கப்படும் காலமாக, திரைக்கு அப்பால் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் கூட்டிச் சேர்க்கப்பட்டனர். “**துன்மார்க் கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்து கொள்வார்கள்.**” (தானி. 12 : 10) என்பது தேவனுடைய அறிவிப்பாயிருக்கிறது. நம்முடைய பாட வசனம் இந்த காலத்தைக் குறித்து “**சகோதரரே நீங்கள் இருளில் இருக்கிறவர்கள் அல்லவே**” என்று அறிவிக்கிறது. இது, சகோதரர்கள் கொஞ்சம் பேராய் இருக்கிறார்கள் என்ப தையோ அல்லது அவர்களில் குறிப்பிடத்தக்க பேர் இன்னும் போதுமான அளவுக்கு நாம் வாழ்ந்து கொண் டிருக்கிற காலங்களையும் வேளைகளையும் பற்றிய பகுத்தறிவுக்கு விழித்துக் கொள்ளவில்லை என்பதையோ குறித்துக் காட்டுவதாயிருக்கிறது. சகோதரர்களில் அநே கரும் உலகத்தாரில் அநேகரும், “**துன்மார்க்கரில்**” அநேகரும், நாம் விசித்திரமான காலங்களிலும், விநோதமான சூழ்நிலைகளின் கீழும் வாழ்ந்து வருகிறோம் என்பதை உணர்ந்து கொள்கிறார்கள். இவர்கள், இன்றைக்கு என்ன பார்க்கிறோமோ, அது சென்ற நூற்றாண்டுகளில் நடந்தவைகளே திரும்பவும் மறுபடியு மாக நடந்து கொண்டிருக்கின்றன என்று தங்களைத் தாங்களே நம்பும்படி செய்ய முயற்சிக்கின்றனர். இவர்கள் நித்திரைக்கென்று தங்களுக்குள், “**சமாதானமும், சவுக்கியமும்!**” உண்டு என்று சொல்லி தங்களைத்

தாங்களே தூங்க வைக்கின்றனர். இந்த மனப்பான்மையையே வேத வாக்கியங்கள் முன்னறிவித்துள்ளன. "**சமாதானமும், சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, அழிவு சடிதியாய் அவர்கள் மேல்வரும், அவர்கள் தப்பிப்போவதில்லை.**" தற்காலத்திய மற்றும் எதிர்கால சூழ்நிலைகளைக் குறித்த தெளிந்த வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ள சிலாக்கியம் பெற்றவர்கள் "சகோதரர்களாகிய நீங்கள்" மட்டுமே. இந்த யுகத்தின் அறுப்புக்காலத்தில் அதாவது மீட்டுக்கொள்ளும் காலத்தில், பரீட்சிக்கும் காலத்தில், "**கோதுமை மணிகள்**" எல்லாம் பரலோக "**களஞ்சியத்திற்குள்ளாக**" சேர்க்கப்படுகிற காலத்தில், வயலானது, "**பதர்களையெல்லாம்**" அக்கினி போன்ற சோதனையில் அகற்றி சுத்தப்படுத்துகிற காலத்தில், உபத்திரவத்தின் கலப்பையானது உலக மனுக்குலத்தாரினூடே உழுது, இப்போது துவங்க இருக்கிற புதிய நேமகத்திற்காக முழு உலகத்தாரையும் தயார்படுத்துகிற காலத்தில் இருக்கிறோம் என்பதை நாம் அறிவோம்.


தெய்வீக முறைமைகளையும், தெய்வீக திட்டத்தில் சீக்கிரமே தொடர்ந்து வருகிற நிகழ்வுகளையும் விளக்குகையில், தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் நமக்கு "**உழுகிறவன் அறுக்கிறவனை தொடர்ந்து பிடித்து**" (ஆமோ. 9 : 13) என்று சொல்கிறார். தெய்வீக திட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் மிக துல்லியமாக திட்டமிடப்பட்டு இருப்பதால் ஒவ்வொரு பகுதியும் மிகச்சரியாக ஒன்றோடொன்று இணைந்து இசைவாக கிரியை செய்கிறது. சுவிசேஷ யுகத்தின் அறுவடை இந்த கிறிஸ்தவ யுகத்தின் முதிர்ந்த கனிகளை கூட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. பலியினாலே யேகோவா தேவனுடன் உடன்படிக்கை செய்திருக்கிற "**பரலோகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறாகிய சபையைக் கூட்டிச் சேர்த்துக்கொண்டிருக்கிறது.**" மேசியாவாகிய பரிசுத்தவான்களின் தலையானவர் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ச்சியடைந்து மகிமைப் படுத்தப்பட்ட இயேசு ஆவார். இந்த மேசியாவின் சரீர அங்கத்தினர்கள், ஒவ்வொரு தேசத்திலிருந்தும் முதலாவது யூதர்களிடமிருந்தும், அதன் பின்பு எல்லா ஜாதிகளிலுமிருந்தும் கூட்டிச் சேர்க்கப்பட்டனர். சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய அழைப்பும், பரிசுத்தவான்களாகிய தியாக பலி செய்பவர்களின் தேர்ந்தெடுப்பும், எல்லா மதப் பிரிவுகளையும், எல்லா சபைப் பிரிவுகளையும், எல்லா ஜாதிகளின் வரிசைகளையும், நிராகரித்தது, "**கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.**" கொடூரமான காற்றுகளாகிய "ஆகாயத்து அதிகாரங்கள்" தளர்த்தப்பட்டு, உலக யுத்தங்கள் எனும் "பயங்கரமான புயலை" உருவாக்கியது, ஆனால் தேவனுடைய ஊழியக்காரர்களை முத்திரையிடும் வரைக்கும் பிடித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நெற்றியில் முத்திரை போடப்படுதல் என்பது பரத்துக்குரிய காரியங்களை அறிவுப்பூர்வமாக




புரிந்துகொள்ளுதலை குறித்துக் காட்டுகிறது. அத்துடன் அறுவடை வேலையுடன் நெருக்கமாக இணைக்கப் பட்டிருக்கிறது. முத்திரையிடப்பட்டுள்ளவர்கள் முதிர்ந்த கோதுமை மணிகளாக பரலோக களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டனர். முத்திரையிடும் வேலை நிறைவேற்றப் பட்டவுடன் போராட்டம் மற்றும் உபத்திரவமாகிய காற்றுகள் உலக யுத்தத்தில் அவிழ்த்துவிடப்பட்டன. எஜமானருடைய அறிவிப்பின்படி, அதன் முடிவு "**யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலமாயிருக்கும்.**" இதைப் போல மீண்டும் இருக்காது, உலக மகா யுத்தங்களில் தொடங்கி உலக புரட்சி, அர்மகெதோன் ஊடாக முன்னேறி உலக அராஜகம் மற்றும் பாலஸ்தீனத்தில் யாக்கோபின் இக்கட்டில் வந்து உச்சநிலையையடையும். பயங்கரமான பாடங்கள் இந்த உபத்திரவங்கள் மூலமாக மனுக்குலத்தாரால் கற்றுக் கொள்ளப்பட்டு அவை எல்லா காலத்துக்கும் போதுமானவைகளாயிருக்கும். போராட்டம், வெறுப்பு, விரோதம் மற்றும் அந்த உபத்திரவ நாளின் அராஜகம் ஆகியவை தேவனுடைய வார்த்தையில் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. (தானி. 12 : 1; ஏசா. 63 : 1-7; எரே. 25 : 15-38; எசே. 7 : 1-27, 38, 39; யோவே. 2 : 1-11; 3 : 2-16; ஆபகூ. 3 : 2-16; சகரி. 12 : 2-9; மத். 24 : 20-22; 1 தெச. 5 : 1-5; யாக். 5 : 1-8). உபத்திரவ காலம் மெய்யாகவே தேவ கோபத்தின் காலமாக அறிவிக்கப்படுகிறது. எனவே நாம் அதன் தன்மையின் காட்சியைக் காணத் தவறக்கூடாது. (லூக். 21 : 25-27; வெளி. 6 : 13-17; 14 : 17-20; 16 : 18-20; 18 : 4-24; 19 : 1-3, 11-21). தேவனுடைய நீதி பொதுவாக அநீதிக்கும், சுயநலத்துக்கும் எதிராகக் கடுங்கோபம் கொண்டிருக்கிறது. ஏனெனில் பொதுவாக சுயநலம் என்பது பாவத்திற்கான மற்றொரு பெயராகும். எல்லா பாவமும் சுயநலமானவை. மேலும் சுயநலமனைத்தும் பாவமாகவே இருக்கிறது. தொழிற்சாலையின் தலைவர்கள், கல்வியின் தலைவர்கள், சொத்து சம்பந்தமான தலைவர்கள் ஆகியோர், இந்நாளில் மிகப்பெரிய சந்தர்ப்பங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பூமியின் ராஜாக்களைவிட தங்கள் செயல்பாடுகளுக்கு மிகுதியான பொறுப்பாளிகள் ஆவர்.


மனுஷ இருதயங்களில் பாவத்துக்குரிய சுயநலத்தின் கூறு எப்போதுமே தங்கி இருக்காதா, பாவம்




**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.** – யோவா. 15 : 13

நிறைந்த சுயநலமான விருப்பங்கள் பற்றிய போராட்டம், நித்தியகாலமெல்லாம் இருக்கும் என்பதை இது சுட்டிக் காட்டாதா? என்று சிலர் கேட்கலாம். நாங்கள் இல்லை என்று பதிலளிக்கிறோம். தேவனுடைய திட்டம் பூரணமாக பிரச்சனையை சமாளிக்கின்றது. இயேசு பூமிக்குரிய காரியங்களைப் பொறுத்தவரை தம்முடைய சுயநலமற்ற தன்மையை எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்தது, நீதிக்கும், பிதாவின் சித்தத்திற்கும் அவருடைய உத்தமத்தை நிரூபித்ததாக மட்டுமல்லாமல், அவருடைய சுயநலமற்ற தன்மை யையும், அவருடைய அன்பையும் நிரூபித்தது. "**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.**" (யோவா. 15 : 13). மனுக்குலத்தின் இந்த சிநேகிதர் புதிய நேமகத்தில் உலகத்தின் மகா பெரிய ராஜாவாக இருப்பார். ராஜ்யத்தில் அவருடைய கூட்டாளிகளாக இருக்கப் போகிறவர்கள் மணவாட்டி வகுப்பார் ஆவர். மணவாட்டி வகுப்பார் அவருடைய ஆவியையும் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிகிற குணாதிசயத்தை மட்டுமே கொண்டவர் களாவார்கள். சுயத்தை தியாகஞ் செய்தல், அயலா ரிடத்தில் அன்பு காட்டுதல், சுயநலமற்ற அல்லது தன்னலமற்ற அன்பு ஆகியவற்றை அவர்கள் கடை பிடித்தனர். சுவிசேஷ யுகத்தின்போது இவைகள் எப்போதும் அறியப்படவில்லை. அவர்களுடைய மெய்யான குணாதிசயமும், தன்னலமற்ற தன்மையும் பகுத்து அறியப்படவில்லை, ஏனெனில் அவர்களுடைய பொக்கிஷம் பூமிக்குரிய பாத்திரமாகிய "மண்பாண் டங்களில்" இருந்தது. அது அவர்களுடைய இருதயத்தின் மெய்யான பக்தியை எப்போதும் முழுமையாக குறித்துக் காட்டவில்லை. அப்படிப்பட்டவர்கள் தங்கள் இருதயத்தின் சுயநலமற்ற தன்மையையும், கர்த்தரிடத்தில் உண்மைத் துவத்தையும் வெளிப்படுத்திக்காட்டியதால், அவர்கள் உயிர்த்தெழுதலில் அவர்களுக்கு புதிய சரீரங்கள் கொடுக்கப்படும் என்பது தேவனுடைய ஏற்பாடா யிருக்கிறது. "**கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்: பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்: ஜென்ம சரீரம் விதைக்கப்படும்** (ஆதாமின் பலவீனமும், மாம்சீக அபூரணங்களும்) **ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.**" அது பூரணமான முழுமையான ஒன்று, குறையென்பதே இல்லாதது. (1 கொரி. 15 : 42-44). அவர்களுடைய மீட்பருடன் சேர்ந்திருக்கிறவர்கள் பரத்துக்குரிய ராஜ்ய வகுப்பாக ஆயிர வருடங்களாக உலகத்தை ஆளப்போகிறவர்களாகிறார்கள். நிச்சயமாகவே, நாம் இவைகளைக் குறித்து நம்பிக்கையுடன் இருக்கலாம்; நாம் அவர்களில் உறுதியான நம்பிக்கை கொள்ள முடியும். தேவன் அவர்களைத் தேர்ந்தெடுத்தது மற்றும், அவர்களுக்கு ஆயிர வருட காலத்திற்கு உலகத்தின் மீது ஆளுகையைக் கொடுக்க சித்தமாயிருப்பது போன்ற உண்மை, அவர்களுடைய தகுதியையும், செயல் திறமையையும் நிரூபிக்கின்றது.


அந்த அரசாங்கம் குடியரசாக இருக்காது, ஆனால் ஒரு குடையின்கீழான, ஏகாதிபத்திய ஆட்சியாக, தேவனுடைய அரசாட்சியாக, தெய்வீக ராஜ்யமாக இருக்கும். கிறிஸ்துவும், அவருடைய மணவாட்டியும் புதிய நேமகத்தின் ராஜாவும், ராணியுமாயிருந்து, பல நூற்றாண்டுகளாக கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களை நீக்கிப் போடுவர். தேவனுடைய ராஜ்யமானது, அந்தகார ராஜ்யம் இருந்து வந்தது போலவே கண்ணுக்கு புலப்படாததாய் இருக்கும். அது அந்த அந்தகார ராஜ்யத்தைப் போலவே மனுஷ (கருவிகள்) நிறுவனங்கள் மூலமாகவே செயல்படும். ஆனால் இதன் மனுஷீக ஆட்களுக்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். வேத வாக்கியங்கள் நமக்கு சொல்கிறபடி, பழைய ஏற்பாட்டின் பாத்திரவான்களான மூப்பரான பாத்திர வான்கள் மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப் படவில்லை யென்றாலும், பாத்திரவான்களாக பிரதிஷ்டை செய்த வகுப்பாராகிய வாலிபரான பாத்திரவான்கள் ஆகியோர் பூமியின் மீதெங்கும் பிரபுக்களாயிருந்து மனுஷரிடையே மேசியாவின் ராஜ்யத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் காட்டுவார்கள். அதுமட்டுமல்ல ஆனால் "**ஜீவனுக்குரிய உயிர்த்தெழுதலில்**" பங்கடைவதன் மூலம் அவர்கள் பூரண




**தேவனிடத்தில் விசுவாசமாய் இருத்தல் என்பதில் அவருடைய காலங்களில் விசுவாசம் வைத்தலும் அடங்கும்.**
**ஆபகூக் 2 : 3.**

மனுஷராகவும் இருப்பார்கள். எப்பேற்பட்ட மகத்தான திட்டம்! தேவனுடைய ஏற்பாட்டின்படி, உபத்திரவகாலம், பூமியின் மீது பரத்துக்குரிய ஆளுகை ஸ்தாபிக்கப் படுவதற்குமுன்பே வருவது, பயங்கரமாயிருந்தாலும் ஒப்பிட்டுப்பார்க்கையில் குறுகிய காலமானதாகவே இருக்கும். மற்ற காரியங்களோடு யூத ஜாதியார் மீது, அவர்களுடைய யுகத்தின் அறுப்பின் வேலையைத் தொடர்ந்து வந்த பயங்கரமான உபத்திரவத்தில் இது அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. அதன்பின்பு சமமாக் குகிற வழிமுறை வரும், அது முடிவாக ஒவ்வொ ருவருக்கும் ஆசீர்வாதமாக இருக்கப் போவதை நிரூபிக்கும்.


தேவனுடைய ஜனங்கள் தங்கள் கரங்களைக் கட்டிக்கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்; அதிகா ரங்களுக்கு அவர்கள் இடையூறாக இருக்கக் கூடாது. கர்த்தர் மீது மாத்திரமே அவர்கள் நம்பிக்கையுடன் சார்ந்திருக்க வேண்டும், மாம்சத்துக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் அல்ல என்று தனிப்பட்ட விதத்தில் விசேஷமாக எச்சரிக்கப்படுகிறார்கள். பரி. யாக்கோபு இந்த கருத்தைப் பற்றி எழுதும்போது, வருகிற உபத்திர வத்தைப்பற்றி அறிவித்து, ஐசுவரியவான்கள் மீது அது மிக கடுமையாக இருக்கும் என்று சொல்கிறார்; "**ஐசுவரியவான்களே கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்**" (யாக். 5 : 1). சந்தேகமின்றி அந்த உபத்திரவங்கள் தரித்திரர் மேலும்கூட இருக்கும்; ஆனால் அவர்களுக்கு அவை சற்றே கடுமை குறைந்ததாக இருக்கும், குறைந்த அளவில் கடுமையுள்ளதாகத் தோன்றும், ஏனென்றால் அவர்கள் குறைவான வசதியிலும், குறைவான சௌகரி யத்திலும் இருந்து பழக்கப்பட்டு வருவதால் அப்படி இருக்கும். தேவனுடைய ஜனங்களுக்கு இங்கே ஒரு செய்தியிருக்கிறது, "**இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்**" (யாக். 5 : 7); "**எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்**" (செப். 3 : 8). "**நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள், அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்**" (செப். 2 : 3). இந்த உபத்திரவம் வேதாகமத்தின்படி மூன்று பொதுவான காலகட்டங்களைக் கொண்டிருக்கிறது – உலக யுத்தம், புரட்சி மற்றும் அராஜகம். இது உலகம் முழுவதும் உள்ளடக்கியதாக, இறுதியாக விசேஷமான ஒரு காலக் கட்டத்தில் இஸ்ரவேலும், பாலஸ்தீனத்தில் அதன் கொள் ளைக்காரர்களையும் உள்ளடக்கிய மூன்று பாகங்களைக் கொண்ட உபத்திரவம் இருக்கும். (எரே. 30 : 5-9; எசே. 38 : 8, 9, 22). யுத்தத்தின் போக்கு ஏற்கனவே கடந்த காலத்திலிருந்தே இருக்கிறது. அத்துடன் புரட்சியின் போக்காகிய அர்மகெதோன், இப்போது நம்மீது மத்திய கிழக்கு பகுதியில் இருக்கிறது, முடிவாக அது உலகளாவியதாகும். அதே சமயத்தில் இந்த பாடுகள்




யாவும் பாவத்திற்கு எதிராகப் பற்றி எரிகிற தேவனுடைய கோபமாக இருக்கும். அவை ஒரு நல்ல நோக்கத்திற்காக திட்டமிடப்பட்டவைகளாயிருக்கின்றன; ஏனெனில் இந்த காலத்திய துன்பப்படுதலால் உலகத்தார் பெரிய அளவில் மிக கடினமான பாவத்தின் கொடுமையான இயல்பையும், அழிவுக்குரிய விளைவுகளையும், அதன் திகைப்பூட்டும் விளைவுகளிலிருந்து விடுதலைபெற வாஞ்சை கொள்ளவும் அறிந்து கொள்வார்கள். இது தேவனால் திட்டமிடப்பட்டுள்ளபடி, அவர்கள் ஆயிரவருட ராஜ்யத்தின் ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும், தங்களை அர்ப் பணிக்கவும் அவர்களை ஏவுகிறதாக இருக்கும். அதன் மூலமாக பூமியின் ஜாதிகள் எல்லாரும், ஆசீர்வதிக்கப் படுவார்கள். (ஆதி. 12 : 3; 22 : 18; அப். 3 : 25; கலா. 3 : 8, 9, 16). தேவன் மனுஷருடைய கோபத்தை – பாவத்தை – அவரை துதிக்கும்படி மாற்றுவார். (சங். 76 : 10). மகாபெரிய உபத்திரவத்தின் இந்த விளைவு களின் மத்தியில் நாம் இருந்து வருகிறோம்; ஆகையால் விசுவாசத்தோடுகூட இன்னும் கொஞ்ச காலத்திற்கு இருக்கப்போகிறோம், மகிமையான விளைவில் (பலனில்) நம்பிக்கையுடன் நாம் அமைதியாக காத்திருக்க வேண்டும். தேவனுடைய சாதுரியமான ஏற்பாட்டின்கீழ் இவை உணர்ந்து கொள்ளப்படும். அப்படிப்பட்ட விளைவுகளுக்காகவும், அவரிடத்தில் விசுவாசமுள்ள வர்களுக்காக உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள உபத்திர வத்தின் மத்தியில் கிடைக்கும் சமாதானத்துக்காகவும் தேவனை ஸ்தோத்தரிப்போமாக!

***

*இப்பத்திரிக்கையில் அடங்கிய வேத போதனைகளை இன்னும் அதிக தெளிவாகவும் விபரமாகவும் அறிய விரும்புகிறவர்கள் பின்வரும்*




*விலாசத்தில் தொடர்பு கொண்டு, 516 பக்கங்களைக் கொண்ட – "**யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு**" என்னும் புத்தகத்தை வாங்கி வாசித்தறிந்து கொள்ளலாம்.*

# கர்த்தருக்குக் காத்திருத்தல்

***Waiting on the Lord***

**“கர்த்தருக்குக் காத்திரு: அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்: திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.”** (சங். 27 : 14)

இந்த இரண்டு புத்திமதிகளிலும், வாக்குத்தத்தத்திலும் பலன்தரும்விதமான உபயோகத்தையும் நம்முடைய சிந்தனைக்கு சில அருமையான கருத்துக்களையும் நாம் காண்கிறோம். (இந்த இரண்டு புத்திமதிகளும் நிறை வேற்றப்படுதலின் நிபந்தனையின் பேரில் தான் வாக்குத் தத்தமானது கொடுக்கப்பட்டுள்ளது). முதலாவது புத்திமதி யானது, “**கர்த்தருக்குக் காத்திரு**” என்பதாகும். அதை முக்கியப்படுத்துவதற்காக, நம்முடைய பாடவசனத்தின் கடைசி பாகத்தில் அந்த வார்த்தை திரும்பவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்போடு ஒப்பிடுகையில் எபிரேய மொழியில் கடைசி பாகத்தில் “நான் சொல்கிறேன்” என்று ஆங்கிலத்தில் சொல்லப் பட்டிருக்கிற வார்த்தைகளுக்கு சமமான வார்த்தைகள் இல்லை. ஆனால் மொழிபெயர்ப்பாளர்கள், தங்க ளுக்கான சரியான விதிக்கு முரணாக, “நான் சொல் கிறேன்” எனும் வார்த்தைகளை (கூட்டிவிட்டு) சாய்த்து எழுதி அதனை வித்தியாசப்படுத்தத் தவறிவிட்டனர். (தமிழ் வேதாகமத்தில் சரியாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) கர்த்தருக்குக் காத்திருத்தல் என்பது ஒருவனைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்துவதும், சம்பந்தப்பட்ட காரியத்தில் அவர் தமது சித்தத்தைத் தெரியப்படுத்தும் வரைக்கும் செயல்படாமல் காத்திருப்பதையும் அர்த்தப் படுத்துகிறது. இது, அந்த காரியத்தை வெளிப்படுத்த நாம் அவரையே நோக்கிப்பார்த்திருக்கும் சிலாக்கியத்தைக் கொடுக்கிறது. இது, எவ்வாறாக இருப்பினும் அவர் ஏற்கனவே நமக்குத் தமது சித்தத்தை அறியச்செய்து,




**கர்த்தருக்குக் காத்திரு: அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்: திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.** சங். 27 : 14

நம்மை கிரியை செய்ய அழைத்திருக்கிற விஷயங்களில் நாம் செயல்படாமல் இருக்க வேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் எந்த விஷயத்தில் அவர் தமது சித்தத்தை நமக்கு அறியும்படி செய்யா திருக்கிறாரோ, அவ்விஷயத்தில், அவருடைய தகுதியான சித்தம் தெளிவாக்கப்படும் வரைக்கும், அவர் அதை ஏற்ற சமயத்தில் தெளிவுப்படுத்துவார் என்னும் முழு நிச்சயத் துடன் நாம் ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாயிருக்கிறது.

வேதாகமத்திலிருந்து சில உதாரணங்கள் இதனைத் தெளிவுப்படுத்தும். யேகோவா இஸ்ரயேலர் களை செங்கடலில் அவருக்குக் காத்திருக்கும்படி அறிவு றுத்தினார். அதன்பின்பு அவருடைய இரட்சிப்பை அவர்கள் அனுபவித்தனர். அந்த அலைகளும், காற்று களும் அவர்கள் கடந்து செல்ல வேண்டிய கடலடிப் பாறைகளை வெளிக்கொண்டுவர காத்திருத்தல் அவசிய மாயிருந்தது. அந்த சமயத்தில் தேவன், வழிநடத்தும் ஸ்தம்பங்களின் மூலம் எகிப்தியர் பக்கம் இருளாயும், இஸ்ரயேலர் பக்கம் வெளிச்சமாயும் இருக்கிற விதமாய் இஸ்ரயேலர்களைப் பாதுகாத்தார்; அத்துடன் அவருடைய ஏற்ற வேளை வந்தபோது, இஸ்ரயேலரைப் பாதுகாப்பாக முன்னோக்கி அந்த கீழ் காற்றினால் உலரச் செய்யப்பட்ட கடலடிப்பாறைகள் வழியாக நடந்து செல்லும்படி அறிவுறுத்தினார். தேவன் நம்மிடத்திலும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்; நாம் புதிய செயல்பாட்டிற் குள்ளாக பாதுகாப்பாக முன்னோக்கிச் செல்வதற்காக அவர் நம்மைத் தகுதிப்படுத்த அவசியமானதும் அது சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளையும் செய்து முடிக்கும் வரைக்கும், நம்மை அவர் காத்திருக்கச் செய்கிறார். இந்த காத்திருக்குதலின் காலத்தில், அவர் தேவையான உதவியை நமக்கு அளிக்கிறார். தாவீது எப்போதும் கர்த்தருடைய சித்தத்தைக் கண்டறிய ஏபோத்தின் மூலம் அவரிடம் ஆலோசனை செய்வார். குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலையில் கர்த்தர் தமது சித்தத்தை வெளியரங் கமாக்கும் வரைக்கும் ஒன்றும் செய்யாது காத்து இருந்தார். இயேசு தேவனுக்கு காத்திருந்ததும், தேவன் தமது ஏற்ற சித்தத்தை வெளிப்படுத்தும் வரை தமது ஊழியத்தை தொடங்காமல் இருந்ததும் மற்றொரு எடுத்துக்காட்டாகும். மற்றொரு உதாரணம் பரி. பவுல் ஆவார். அவர் தேவனுடைய சித்தத்தை அறிந்து

கொள்வதற்காக அரேபியாவில் இளைப்பாறி தேவசித்தம் வெளிப்படும் வரைக்கும் அங்கே தமது ஊழியத்தை அவர் துவங்குவதற்கு முன்பாக காத்திருந்தார்.

இங்கே கர்த்தருக்கு காத்திராதவர்களைப் பற்றியும், அவற்றின் விளைவாக ஏற்பட்ட துயரமான முடிவுகள் பற்றியும் சில விளக்கங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஏதேனில் சாத்தான் ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்காக தேவனுக்கு முன்னால் அவசரமாக ஓடினான். விழுந்துபோன தூதர்களும் ஜலப்பிரள யத்துக்கு முன்பாக, சாத்தான் புகுத்திய எண்ணத்தின்படி சந்ததியை உண்டாக்கி அதாவது இதனை அவர்கள் செய்வதால் மனுக்குலம் சுதந்தரித்திருந்த அபூரண சீர்கேட்டைத் தள்ளிவிட்டு மனுக்குலத்தை தூக்கிவிட முடியும் என்று முயற்சித்தனர். எவ்விதத்திலும் தேவனுடைய சித்தத்தைப் பற்றி ஆலோசிக்கவில்லை. யூதாஸ் கர்த்தரைக் காட்டிக் கொடுப்பதன் மூலமாக, இயேசுவின் கரத்தை வற்புறுத்தி, இஸ்ரயேலை மனம் மாறச் செய்யும் ஒரு பெரிய அற்புதத்தின் மூலம் தம்முடைய மேசியாத்துவத்தை நிரூபிக்கவும், அதனி மித்தம் அவர் சிங்காசனத்தை அடையவும், ரோம சாம்ராஜ்யத்தை கவிழ்த்துவிட்டு, இஸ்ரயேலை உயர்த்தி உலகத்தை ஆசீர்வதிக்கவும் ஒரு சூழ்நிலையை உருவாக்கினான் என்று மேசியாவைக் குறித்த யூதாஸின் திட்டத்தை உணர்ந்து கொண்டாலும், தேவனுடைய சித்தம் அப்படியில்லை.

## கர்த்தருக்கே காத்திரு

நாம் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டியது கர்த்தருடைய சித்தம் என்ன என்பதைக் குறித்து நாம் அறியாத புதிய காரியங்கள் பற்றிய அறிவுறுத்தல் களுக்காகவே ஆகும். ஆயினும் அவர் ஏற்கனவே தம்முடைய சித்தத்தை அறியச் செய்திருக்கும் விஷயங் கள் பற்றி நாம் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டி யதில்லை. எங்கெல்லாம் அவர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறாரோ, அங்கெல்லாம் நாம் தகுந்த செயல்பாட்டிலும், போற்றத் தகுந்த வைராக்கியத்தோடும் முன்செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம்; அவருடைய சித்தம் தெளிவாகக் கண்டறிந்த பிறகு, நாம் அதைச் செய்யத் தயக்கம் காட்டக் கூடாது.

காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருப்பது, மாலையில் நாம் இளைப்பாறும் சமயம், உணவு அருந்தும் நேரங்கள், அன்றாட காரியங்களைப் பொதுவாக ஒழுங்குப்படுத்துதல் போன்ற விஷயங்களில், நாம் அவற்றை செய்ய வேண்டிய ஒவ்வொரு நேரத்திலும், நாம் அவைகளைச் செய்வதைச் சுட்டிக்காட்ட விசேஷ மான பரிபாலனத்திற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட விஷயங்கள், கிரமமானதும், ஒழுங் கானதுமாக, தன்னடக்கத்தோடும், பிரயோஜன




முள்ளதாகவும் அவ்வப்பொழுது செய்து முடிக்கப்பட வேண்டியவை ஆகும். புதிய கொள்கைகள், செயல்பாடு கள், குண நடத்தைகள், சூழ்நிலைகள், நிபந்தனைகள், அனுபவங்கள் முதலியவை பற்றிய கேள்விகளில் நாம் அவைகளைச் செய்ய வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பது தெளிந்த புத்தியின் ஆவியினால் வழிநடத்தப்பட வேண்டும்; பின்பு நாம் செயல்படுவதற்கு முன்பு அவருடைய தகுதியான சித்தத்தை கற்றுக் கொள்ளும் வரை கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்.

சில சமயங்களில் கடமைகள் முரண்பாடாக தோன்றும்போது, அவருடைய சித்தம் என்ன என்பதை தீர்மானிக்க அவருடைய வார்த்தையின் உதாரணங்கள் மற்றும் உபதேசங்கள் மட்டுமே நமக்கு கூடுமானதாக இருக்காது. இது விசேஷமாக குழப்பமான புதிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட விஷயங்களில் நாம் நம்மிடத்தில் உள்ள எல்லா சுயசித்தத்தையும், உலக சித்தத்தையும் வெறுமையாக்கிவிட்டு தேவனுடைய சித்தத் தைச் செய்வதற்குரிய வாஞ்சையினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மனப்பான்மையிலிருந்து நம்மிடத்திலிருக்கிற அவருடைய ஆவி, அந்த விஷயத் தைப் பற்றி எந்த காரியம் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துகிற வேதாகம விதிகளுக்கும், உதாரணங் களுக்கும் முரண்பட்டதாக சுட்டிக்காட்டுகிறதாக தோன்று கிறது என்று பார்க்க ஆவலோடு இருக்க வேண்டும். அவருடைய ஆவியானது ஒரு விஷயத்துடன் ஒத்துக் கொண்டு மற்றொன்றுடன் அப்படியில்லை என்றால், அது அவருடைய தகுந்த, ஏற்ற சித்தமாயிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால், சில விஷயங்களில், அவருடைய வசனத்திலிருந்தும், ஆவியிலிருந்தும்கூட, நிச்சயமாக அவருடைய தகுதியான சித்தம் என்ன என்பதை உறுதியாக முடிவு செய்ய முடியாது; அப்படிப்பட்ட விஷயங்களில், நாம் அவருடைய திறக்கப்பட்டிருக்கிற பரிபாலனங்களுக்காகக் காத்திருந்து, விழிப்புடன் எதிர் பார்த்திருக்க வேண்டும், அது வசனத்துடனும், ஆவியு டனும் சேர்ந்து தெளிவாக அவருடைய தகுந்த சித்தத்தைச்

சுட்டிக்காட்டும்; ஏனெனில் அவருடைய தகுந்த சித்தத்தை அறிந்துகொள்ள நமது இருதயத்திலிருக்கிற வாஞ்சையையும், அவருக்காக நாம் ஒழுங்காகக் காத்திருப்பதையும் காண்பதால், ஏற்ற நேரத்தில் அதனை நமக்கு வெளிப்படுத்துவார்.

## நாம் ஏன் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்?

நாம் ஏன் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும் என்பதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. நம்முடைய சுய அறியாமையே அப்படிச் செய்ய நம்மை அழைக்கிறது; ஏனெனில் காரியங்கள், நாம் அவருடைய சித்தம் என்ன என்பதைப் பற்றி அறியாத விஷயங்களாய் இருப்பதால், அதை அறிந்து கொள்ளும் பொருட்டு நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. நாம் சுய சித்தத்தையும், உலக சித்தத்தையும் ஒழித்துவிட்டதால், அவருக்கு காத்திருக்கும்படியான நாம் அழைக்கப்பட்டிருக்கிற காரியங்களில் நாம் அவற்றைப் பின்பற்றக் கூடாது. நாம் அவருடைய சித்தத்தை நம்முடைய சித்தமாக எடுத்துக் கொண்டோம் என்பதால், நம்முடைய கரங்களில் விஷயங்களை எடுத்துக்கொண்டு அவருக்காகக் காத்திராமல் அவற்றை செயல்படுத்த அவரைத்தாண்டி அவருக்கு முன்னாக நாம் ஓடக்கூடாது, ஆனால் அவர் நமக்கு அந்த விஷயத்தில் தமது சித்தத்தை தெரியப்படுத்தும் வரைக்கும் நாம் அவருக்குக் காத்திருக்க வேண்டும்.

தேவனுக்காக நாம் காத்திருக்க வாஞ்சிக்க வேண்டும் என்பதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று, அவருக்கு காத்திராத ஒருவர் செய்கிற பாவத்திலிருந்தும், தப்பறையிலிருந்தும் நம்மை காப்பாற்றுவதும் அத்துடன் அப்படிப்பட்ட பாவங்கள் மற்றும் தப்பறைகளுக்கு பலனாக ஒருவன் அறுவடை செய்கிற தீமைகளிலிருந்து நம்மை காத்துக்கொள்வதுமாகும். ஆகவே அதற்காகவும்கூட அவர் இதனை விரும்புகிறார், ஏனெனில் அடிக்கடி நாம் நமக்காக அவர் சித்தங் கொள்கிறவைகளை செய்வதற்கு நாம் தயாராவதற்கு முன்பாக நாம் குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்தாக வேண்டியிருக்கிறது, ஆனால் அவர் இந்த வளர்ச்சியை நாம் அடையும் வரைக்கும் அதனை அறிந்து கொள்ளாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்கிறார். பின்பு நாம் அவருடைய சித்தத்தை செய்கிற பாதையில் அடிக்கடி நமக்கு வெளிப்புறத்திலிருந்து தடைகள் வருகின்றன. நாம் அவரது தகுந்த சித்தத்தை செய்வதற்கு முன்பாக அவர் அந்த தடைகளை அகற்ற விரும்புகிறார். நாம் அவருக்கு காத்திருக்க அவர் விரும்புகிறார். பேரலைகளும், காற்றும், கடலின் அடித்தளப் பாறையை வெறுமையாக்கி அதன்மீது மட்டுமே பத்திரமாக அக்கரைக்கு கடந்து போகும் அனுபவத்தை அடைய முடியும் என்பது வரை இஸ்ரயேலர்களை, செங்கடல் அருகே, காத்திருக்கச் செய்ததின் மூலம் இது விளக்கிக் கூறப்பட்டுள்ளது. தேவனுக்கு நாம் காத்திருக்க அவர் விரும்புவது ஏனெனில், அப்படிப்பட்ட காத்திருத்தல் அவரால் எப்போதுமே ஆசீர்வதிக்கப்படுகிறது. இறுதியாக, சாத்தானே கர்த்தருக்கு முன்னதாக நம்மை வேகமாக ஓட வைக்க விரும்புகிறான்; அதன் மூலம் நம்மை கீழ்ப்படியாதவர்களாக ஆக்கவும், நம்முடைய குணாதிசயங்களைக் கெடுத்து நம்மை அவனுக்கு அடிமையாக்கி நம்முடைய அழைப்பை வெற்றிகரமாக அடைந்து கொள்வதிலிருந்து தடுத்து நம்முடைய விசுவாசமாகிய கப்பலைச் சேதமடையச் செய்யவும் அவன் நாடுகிறான்.

நாம் எந்த காரியத்தினிமித்தம் அவருக்காக காத்திருக்கிறோமோ அந்த விஷயத்தில் அவருடைய சித்தத்தை பகுத்தறிய வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற செய்தியால் தேவன் தமக்கு சித்தமான நேரத்திலும், வழியிலும், நாம் அவருக்கு காத்திருப்பதை எப்போதுமே ஆசீர்வதிப்பார் என்பதில் நாம் நிச்சயமாயிருக்கலாம். நம்முடைய வளர்ச்சிக்கு அவசியமானவை எவை என்று, அவருக்கே நன்கு தெரியும். இந்த வளர்ச்சியை அடையக் கூடியவகையில், நம்மை நடத்த அவர் சிறந்த முறையில் அறிந்திருக்கிறார். நம்மில் ஒவ்வொருவரும் இந்த வளர்ச்சியின் படியில் எந்த ஒழுங்குமுறையில் செல்ல வேண்டும் என்று அவர் அறிகிறார்; ஏனெனில் நம்முடைய வித்தியாசமான குணாதிசயங்கள் நம்முடைய வளர்ச்சியை அடைவதற்கு வித்தியாசமான வகையும், ஒழுங்கும் தேவைப்படுகிறது, அதன் காரணமாக அவர் ஒருவருடைய அனுபவங்களை, மற்றவர்களுடையதிலிருந்து வித்தியாசப் படுத்துகிறார். வீழ்ச்சியானது பரம்பரை மூலமாக வெவ்வேறு முறையில் நம்மை பாதித்திருப்பதாலும், நம்முடைய இயல்பான பயிற்சியும், சுற்று சூழல்களும் வேறுபட்டிருப்பதாலும், நம்மில் ஒவ்வொருவருக்கும்




**கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்: கர்த்தராகிய யோகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.**
– ஏசா. 26 : 4

அவசியத்தின்படி, நம்மிலிருந்து குற்றங்களை நீக்கி விடவும், நம்முடைய மனப்போக்குகள், பற்றுகள், குணலட்சணங்கள் மற்றும் விருப்பங்களை சரியான வழிகளில் வளர்த்துக் கொள்ளவும், வித்தியாசமான வழிமுறையிலான பயிற்சியும், அனுபவங்களும் தேவைப் படுகிறது. தேவன் இவை எல்லாவற்றையும் நம்மை பயிற்றுவிப்பதற்காக கணக்கில் எடுத்துக்கொள்வதுடன், தம்முடைய பல்வேறான போதனைகள் மற்றும் பரிபாலனங்களை இந்த வித்தியாசமான சூழல்களுக்கு ஏற்புடையதாக்குகிறார்.

இந்த காரியங்கள் எல்லாம், நாம் அவருக்காக காத்திருக்க வேண்டியதான சூழ்நிலைகளை உருவாக் குகின்றன. மேலும் அவருக்காக காத்திருக்கிறவர்கள், தங்களில் அவர் சிறப்பாக தமது நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகளை அவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். தேவையான அறிவுக்காக நாம் தேவனைச் சார்ந்து இருக்க வேண்டும். தேவைப்பட்ட அனுபவங்களில் நம்முடைய உள்ளும் புறம்புமான சூழல்களை சரிசெய்ய அறிவு நமக்கு தேவையாயிருக்கிறது. நம்மை காத்திருக்கும்படி அவர் செய்துவந்த அந்த சூழல்களுக்குத் தகுதிப்படவும், அவர் நம்மிலும், நம் மூலமாக மற்றவர்களிலும் கிரியை செய்ய வாஞ்சிக்கிற அந்த பலன்களை அடைந்து கொள்ளவும் நாம் தேவனை நம்பியிருக்க வேண்டும். இந்த முடிவுகள் நம்மிடமுள்ள தீமைகளை விட்டுவிடுவதாகவும், நன்மை யானவற்றை நம்மில் வளர்த்துக் கொள்வதாக அல்லது மற்றவர்களுடைய பலவீனங்கள் மற்றும் குற்றங்களை மேற்கொள்ள அவர்களுக்கு உதவிசெய்ய நம்மை பயன்படுத்தவும் அவர்களுடைய குறைவுகளை நிறைவு செய்யவும், வசனத்தைப் படிப்பதிலும், பிரஸ்தாபிப்பதிலும், பயிற்சி செய்வதிலும் தகுதியான பரீட்சைகளில் பிரயோ ஜனமான சகிப்புத் தன்மையிலும் உள்ள நன்மையை அதிகமாக்கிக் கொள்ளவும் உதவியாயிருக்கும். அப்படிப் பட்ட காத்திருக்குதல் நாம் ஏற்ற காலத்துக்குரிய நிகழ்கால சத்தியத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஆசீர்வதிக் கப்படுவதுடன் அதனை அவருடைய மகிமைக்காகவும், மற்றவர்கள் மற்றும் நம்முடைய நலனுக்காக பயன் படுத்தவும் ஊக்கப்படுத்துதலாயிருக்கிறது. தேவனுடைய பிள்ளை காத்திருந்தபோது தேவையான உதவி ஒருபோதும் மறுக்கப்பட்டதில்லை, அவனது காத்திருத்தல் எப்போதுமே அவனுக்கு உள்ளும், அவனுடைய காத் திருத்தல் மூலமாக அவனாலும் தேவன் கிரியை செய்கிறபடி திட்டமிட்டிருக்கிற நன்மையால் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். அப்படிப்பட்ட காத்திருக்குதலின் ஆவி தேவனை பிரியப்படுத்துவது நிச்சயம். இது அவருக்கு, பிரதிஷ்டை செய்த நிலையில் சுயத்துக்கும், உலகத்துக்கும் மரித்து, தேவனுக்குப் பிழைத்திருப்பதில் நம்முடைய உண்மைத்துவத்தை விளக்கிக் காட்டுகிறது. ஆகவே, கர்த்தருக்குக் காத்திரு!

## "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது"

பொறுமையைக் குறித்த தேவனுடைய வார்த்தை அல்லது செய்தி என்னவென்று கவனிப்போமாக, "**நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரண ராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.**" (யாக். 1 : 4).


இந்த தெய்வீக ஆலோசனை தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற இந்த வார்த்தை நம்முடைய பூரணப் படுதலுக்கு எவ்வளவு அவசியமாயிருக்கிறது! குணநலன் களை பரீட்சித்துப் பார்ப்பதில் அவர் முன் குறித்துள்ள தரத்தின்படி போதுமான அளவு நாம் நிரூபித்துக் காட்டுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே நீதியின் கொள் கைகளுக்கும் நம்முடைய உத்தமத்தை நிரூபித்துக்காட்ட நாம் போதுமான பரீட்சைகளை பெற்றுவிட்டோம் என்று நாம் கற்பனை செய்திருப்போம். ஆகவே, பொறுமை எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்று அவர் கிருபையாக நமக்கு விவரிக்கிறார். அதாவது "**உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்**" (1 பேது. 4 : 12) இருக்க வேண்டும். அதற்கு மாறாக, நாம் கிருபையிலும், அறிவிலும், புரிந்து கொள்ளும் திறமையிலும் வளர்ந்து வருவதால், இந்த யுகமாறுதல் காலப்பகுதியில் மகிமைக்கும், கனத்துக்கும் அழைத்திருக்கிற பிரதிஷ்டை செய்துள்ள விசுவாசிகளை (பூமிக்குரிய) ஒரு உயர்வான மகத்துவமான ஸ்தானத்திற்கும், அதன்படி அப்படிப்பட்ட கனத்துக்கு உரியவர்கள் தேவனுக்கும் நீதி, நியாயம், சத்தியம், அன்பு ஆகிய அவருடைய நீதியின் கொள்கை களுக்கும் அவர்களுடைய முழுமையான உண்மைத்து வமானது கடுமையாக சோதிக்கப்படவும், பரீட்சிக்கப்படவும் வேண்டியவர்களாயிருந்தார்கள். அவை கேள்விக்கு அப்பாற்பட்டவை. அவர்கள் ஜெயங்கொண்டவர்களாக ஏற்றுக் கொள்ளப்படத் தயாராகும் முன்பும், ராஜ்யத்திலும் அதன் மகிமையிலும் ஒரு பங்கை நித்திய ஆசீர் வாதங்களுடன் சேர்த்து சுதந்தரித்துக் கொள்ளவும், அவர்களுடைய குணாம்சங்கள் இந்த வரிசையில் விருத்தியடைய வேண்டியிருந்தது. கூடுதலாக தேவன் நமக்குச் சுட்டிக்காட்டுவது என்னவெனில், நம்முடைய கர்த்தரே சோதிக்கப்படவும், பரீட்சிக்கப்படவும், நிரூபிக்கப் படவும் வேண்டியது அவசியமாயிருந்திருக்குமானால், கோபாக்கினையின் பிள்ளைகளாகிய நாம், அவருடைய கிருபையால் மட்டுமே நீதிமானாக்கப்பட்ட நாம் அவரிடம் கொண்டுள்ள நம்முடைய உண்மைத்துவத்தை நிச்சயம் முழுவதுமாக நிரூபிக்க வேண்டும்.

# "உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்"

"**உபத்திரவத்திலே பொறுமையாயிருக்க**" வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் நாம் கவனிக்க வேண்டும். லத்தீன் வார்த்தையின் வடிவமாகிய "டிரிபுலோ" (tribulo) என்பது கோதுமையானது மாவாக அரைக்கப்படுகிற ஒரு பெரிய அரவை கல்லாகிய எந்திரத்தைச் சுட்டிக்காட்டுகிறது. ஒரு மருந்து தயாரிப்பாளர் தனது மருந்துகளைப் பொடியாக்கப் பயன்படுத்தும் கருவியைச் சுட்டிக்காட்டவும் கூட இந்த வார்த்தையே பயன்படுத்தப்படுகிறது. இதைப் போலவே கர்த்தரும் நம்மை இந்த அரவை கல்லுக்குள், வாழ்வில் இதைப் போன்ற ஒரு அனுபவத்தைப் பெறுவதற்காக போட்டிருக்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலைகள், ஏமாற்றங்கள், தாமதங்கள், அன்புக்குரியவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுதல், துன்புறுத்தல்கள், ஏழ்மை, கஷ்டங்கள், எதிர்ப்புகள், நாம் நேசிக்கிற சகோதரர்கள் மூலம் வரும் துன்பங்கள், சில சமயங்களில் மரணம், இவை யாவுமே "டிரிபுலம்" (tribulam) ஆகும். நம்மை அப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்குள்ளாகப் போடுகிற சந்தர்ப்பங்களும், நம்மில் கிரியை செய்கிற இந்த வேலைகளின் வழிமுறைகளும் நம்முடைய "ட்ரிபுலுஸ்டோவாக" (tribulusto) (உபத்திரவமாக) இருக்கிறது.

பொறுமை என்பது வழக்கமாக நீடிய சகிப்பாக அர்த்தங்கொள்ளப்படுகிறது. புதிய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பாளர்களால் இந்த குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டு சொற்களால் சுட்டிக்காட்டப்படுகிற கருத்துக்களுக்கு ஆங்கிலத்தில் இருப்பதைப் போலவே கிரேக்க மொழியிலும் இரண்டு தனிப்பட்ட சொற்கள் இருக்கின்றன. கிரேக்கச் சொல்லான 'மேக்ரோதுமியா' (makrothumia) என்பதற்கு நீடிய சகிப்பு (long suffering) என்று அர்த்தம்; கிரேக்க வார்த்தையாகிய "ஹியூப்போமோன்" (hypomo ne) என்பதற்கு பொறுமை என்று அர்த்தம். சில சமயங்களில் மொழிபெயர்ப்பாளர்கள் ஹியூப்போமோன் என்பதற்கு நீடிய சகிப்பு என்றும், சில சமயங்களில் மேக்ரோதுமியாவுக்குப் பொறுமை என்றும் மொழிபெயர்த்துள்ளனர். இந்த இரண்டு வார்த்தைகளின் அர்த்தங்களைப் பற்றி ஒரு சராசரி மனிதன் வேத வாக்கியங்களை வாசிக்கும் போது ஏறக்குறைய அது குழப்பத்தை ஏற்படுத்தும்.

அப்படியெனில் இந்த இரண்டு வார்த்தைகளின் அர்த்தங்களுக்கு இடையே என்ன வித்தியாசம் இருக்கின்றது? அவற்றைப் பற்றிய சுருக்கமான விளக்கங்கள் இந்த விஷயத்தைப் பற்றி புரிந்து கொள்ள நமக்கு உதவியாயிருக்கும். நீடிய சகிப்பு (long suffering) என்பது கோபம் ஏற்படுத்தும் சூழ்நிலைகளின் மத்தியிலும், ஒருவன் அமைதியுடன் கோபப்படாமல் தன்னைக் காத்துக்கொண்டு கடந்து செல்வது ஆகும். இதனையே நாம் இரண்டாம் நிலை கிருபை என்றழைக்கிறோம், அதாவது உயர்தர




முதன்மையான கிருபைகளானது (குணங்களானது) கீழ்நிலை முதன்மையான குணங்களின் முயற்சிகள் நம்மை ஆளாதபடி அடக்கிக் கட்டுப்படுத்துவதன் பலனாக வளர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு கிருபையாகும் (குணாம்சமாகும்). அதே சமயம் பொறுமை என்பது குணாம்சத்தின் பெலனாயிருக்கிறது. அதன் மூலமாக தடைகளுக்கு மத்தியிலும் உறுதியாக நிலைத்திருந்து, சந்தோஷத்தோடு சகித்துக் கொண்டு, நற்காரியங்களில் தன்னடக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதுடன் ஒருவன் தொடர்ந்து முன்னேறுவதுமாகும். இந்த விளக்கங்களிலிருந்து பொறுமை என்பது திட்டவட்டமாக நீடிய சகிப்பை விட அதிக முக்கியமானதாயிருப்பதை நாம் காண்கிறோம். இது ஒரு உயர்தர முதன்மையான கிருபை (குணாம்சம்) மட்டுமல்ல, ஆனால் இது மேலான, ஆதிக்கஞ்செலுத்தும் முதன்மையான கிருபைகளில் ஒன்றாகும்.

நம்முடைய பாடத்தை குறித்து மேலும் விவாதிப்பதற்கு முன்பாக, நாங்கள் இடையே சற்று நிறுத்தி, வேதாகமத்திலிருந்து, பொறுமையானது தனது மைய கருத்தாக, நிலையான சீரான தன்மை, கஷ்டமாக இருந்தாலும் ஒன்றைச் செய்வதற்கு தொடர்ந்து முயற்சிக்கும் குணம், உறுதியாக நிலைத்திருக்கும் தன்மை என்ற கருத்தைப் பெற்றிருப்பதை நிரூபிக்க விரும்புகிறோம். "**முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப் படுவான்.**" (மத். 10 : 22). பொறுமை, விடாமுயற்சி ஆகியவற்றின் கருத்து இந்த வசனத்தில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. டயக்லாட் மொழிபெயர்ப்பு இந்த

வார்த்தையை மிகவும் சரியாக “**முடிவுபரியந்தம் பொறுமையுடன் நிலைத்திருப்பவனே (சகித்திருப்பவனே) இரட்சிக்கப்படுவான்**” என்று கூறுகிறது. இதுவே பாடத்தின் கருத்து என்பது வெளிப்படையாகும். நிலைத்திருப்பது அல்லது சகித்திருப்பது (endurance) மட்டுமே அர்த்தப்படுத்தப் படுமேயானால் இது போதுமானதாயிராது. ஏனெனில் வெறும் முடிவு வரை நிலைத்திருப்பது மாத்திரமே நம்மை ஜெயம் பெற்றவர்களாக ஆக்கி விடாது; அது ஒரு எதிர்ப்பில்லாத சகிப்புத் தன்மையோடுகூட நிச்சயம் ஊக்கத்துடன் செயல்படுவதாகவும் இருக்க வேண்டும். அதுவே நம்மை ஜெயம் பெற ஏதுவாக்கும். “**முடிவு பரியந்தம் பொறுமையுடன்** (நற்கிரியைகளைச் செய்வதில்) **நிலைத்திருப்பவனே** (சகித்திருப்பவனே) **இரட்சிக்கப்படுவான்.**” ரோம. 2 : 7 ஆம் வசனமானது, இதைப் போலவே பொறுமை என்பதன் அர்த்தத்தின்மீது வெளிச்சத்தை வீசுகிறது: “**பொறுமையுடன் தொடர்ந்து நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு, நித்திய ஜீவனை அளிப்பார்.**” (ஆங்கில வேதாகமம் பார்க்கவும். அதில் ‘பொறுமையுடன் தொடர்ந்து’ patient continuance என்றே உள்ளது.)

“**பொறுமையுடன் தொடர்ந்து**” எனும் இரண்டு ஆங்கில வார்த்தைகளும் மொழிபெயர்ப்பாளர்களால் பொறுமை என்று அர்த்தம் தரும் கிரேக்கச் சொல்லான ‘ஹியூப்போமோன்’ என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப் பட்டுள்ளன. “**பொறுமையுடன் தொடர்ந்து**” எனும் சொற்களைப் பயன்படுத்திய போது மொழிபெயர்ப்பாளர்கள் தீமையை உற்சாகமனதோடு சகித்துக் கொண்டு, தீமைக்குப் பதில் நன்மை செய்வதில் தொடர்ந்து உறுதியாய் முன்னேறுவதில் அசையாமல் நிலைத்திருத்தல் என்ற கருத்தை மனதில் கொண்டிருந்தனர். அதனால்தான் அவர்கள் பொறுமை எனும் பெயரெச்சத்தை “தொடர்ந்து” என்ற வார்த்தைக்கு முன்பாக வைத்திருக்கிறார்கள். ஒருவர் சகிப்புள்ளவராக மட்டும் இருப்பதுடன், அவன் (செயல்படாமல்) சுறுசுறுப்பில்லாமல் மந்தமாக மட்டும் இருப்பானானால், அவன் ஜெயங்கொள்ளுகிறவனாக இருக்க முடியாது. அவன் இரண்டாம் நிலை கிருபையை மட்டுமே பயன்படுத்துகிறான்; ஆனால் உயர்தர முதன்மையான கிருபைகளின் மேலாதிக்கமே ஒருவனை ஜெயம் பெற்றவனாக ஆக்கும். ஒருவன் நன்மை செய்வதில் தளராமலும் விடாமுயற்சியுடனும் உறுதியாக நிலைத்திருந்து அதனை நாடினால் இவைகளின் மூலமாக அவன் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பான். ஆகையால், தெளிவாகச் சொன்னால் இந்த வசனத்தில் இந்த வார்த்தைக்கு மிகச் சரியாகப் பொருந்தக்கூடிய வேறு விளக்கம் இருக்க முடியாது. ஏனெனில் நன்மை செய்வதில் விடாமுயற்சியுடன் உறுதியுடன் நிலைத்திருத்தல் மட்டுமே நித்திய ஜீவனை அடைந்து கொள்ள ஒருவனை தகுதிப்படுத்தும். விஷயம் இப்படியிருக்க, இச்சொல்லுக்கு அர்த்தம் நீடிய சகிப்பல்ல; ஆனால் உறுதியாய் நிலைத்திருத்தல் என்று இவ்வசனம் நிரூபிக்கின்றது. இதன் விளைவாக நீடிய பொறுமை அல்லது நீடிய சகிப்பு என்பது ‘ஹியூப்போமோன்’ எனும் சொல்லின் அர்த்தமல்ல. “**நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப்** (சுதந்தரிக்கும்படிக்குப்) **பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.**” (எபி. 10 : 36). நம்முடைய கிறிஸ்தவ நடக்கையில் இந்த உதவியை ஏற்படுத்தித் தருவதில் நம்முடைய தேவன் எவ்வளவு நல்லவராயிருக்கிறார். ஆம், அவர் நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. ***




Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*
Bro. V. Vincent Jeyakumar
Laymen's Home Missionary Movement
32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**